செயற்பொறியாளர் மற்றும் பொதுக்கண்காணிப்பாளர் அலுவலகம், பொ.ப.து., நீ.ஆ.து.,
பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, சென்னை–1.

முன்னிலை: பொறி. சு. கோபாலகிருஷ்ணன், பி.இ.,
செயற்பொறியாளர் (ம) பொதுகண்காணிப்பாளர், பொ.ப.து., நீ.ஆ.து.,

**செயல்முறை ஆணை எண். நி1 / 1075 /2020–நமு (10வ), நாள்: 26.10.2021.**

பொருள்: நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. கி. ராம்குமார் **(பிறந்த தேதி 04.09.1991 / பதிவு எண். 0204014281)** அவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணியேற்பு – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண். 2496 / PSD-I / 2020 நாள். 29.05.2020.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்3(3) / 35935 / 2020 நாள். 17.09.2020.
3. தலைமைப் பொறியாளர், பொ.ப.து., / நீ.ஆ.து, இயக்கம் மற்றும் பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் மேற்குறிப்பாணை எண். எ2 / 2916 / 2020–2 நாள். 21.09.2020.
4. செயற்பொறியாளர் மற்றும் பொதுக்கண்காணிப்பாளர், பொ.ப.து., / நீ.ஆ.து., பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, சென்னை–1 அவர்களின் செயல்முறை ஆணை எண். நி1 / 1075 / 2020–3 / நாள். 22.09.2020.
5. திரு. கி. ராம்குமார், இளநிலை உதவியாளரின் 25.09.2020 நாளிட்ட பணியேற்பு கடிதம்.

.........

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பார்வை (1)–ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வரிசை எண். 88–ல் இடம் பெற்றுள்ள திரு. கி. ராம்குமார் **(பிறந்த தேதி 04.09.1991 / பதிவு எண். 0204014281)** அவர்களுக்கு பார்வை (2)–ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம்,

...2.

5/5/2022

செயற்பொறியாளர் மற்றும்
பொதுக் கண்காணிப்பாளர் பொ.ப.து.,
நீ.ஆ.அ.பொ.ப. பணிமனை, சென்னை-1

சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணையில் தலைமைப்பொறியாளர், பொ.ப.து., / நீ.ஆ.து., இயக்கம் மற்றும் பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை–5 அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., / நீ.ஆ.து., பணிமனை மற்றும் பண்டகசாலை வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அலுவலகத்தின் கீழுள்ள சென்னை–1, பொ.ப.து., / நீ.ஆ.து., பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நிலை–8 / ரூ.19,500–62,000/– எனும் ஊதிய நிலையில் இளநிலை உதவியாளராக **தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 17(1)**–ன்படி தற்காலிக பணிநியமன செய்து ஆணை வழங்கப்பட்டு, பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, சென்னை–1 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக **25.09.2020** முற்பகல் பணியேற்றுள்ளார்.

2) தனியரது பணிப்பதிவேடு மற்றும் மதிப்பெண் பட்டியலை சரிபார்த்ததில், தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான **எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு)**–யில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

3) திரு. கி. ராம்குமார் அவர்களின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுரு தாட்களை ஆய்வு செய்ததில் இளநிலை உதவியாளர் பதவியின் பணிக்காலத்தில் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளோ, புகார் மனுக்களோ, குற்றச்சாட்டுக்களோ ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தண்டனைகள் ஏதும் பெற்றிருக்கவில்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.

4) மேற்கண்ட தகுதிகளின் அடிப்படையில், திரு. கி. ராம்குமார், அவர்களுக்கு இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான **25.09.2020** முற்பகல் முதல் **தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016) பிரிவு 28(1)–ன்படி 'இளநிலை உதவியாளர்'** பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

5) திரு. கி. ராம்குமார், அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான **25.09.2020** முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர்தம் தகுதிகாண் பருவம் தொடங்கிய நாளிலிருந்து **மூன்றாண்டு காலத்தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை** முடிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப் பெறுகிறார்.

...3.

5/9/2022

செயற்பொறியாளர் மற்றும்
பொதுக் கண்காணிப்பாளர் பொ.ப.து.,
நீ.ஆ.அ.பொ.ப. பணிமனை, சென்னை–1

6) தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கான தமிழ்நாடு குடிமைப்பணி பயிற்சியில் அதாவது பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னரே தனியரது தகுதிகாண் பருவம் நிறைவு செய்ததற்கான ஆணை வழங்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒம்/–) சு. கோபாலகிருஷ்ணன், 26.10.2021,
செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர்
பொ.ப.து., / நீ.ஆ.து.,
பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை,
சென்னை–600 001.

பெறுநர்

திரு. கி. ராம்குமார், இளநிலை உதவியாளர்,
செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர் அலுவலகம்,
பொ.ப.து., / நீ.ஆ.து., பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை,
சென்னை–600 001.

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வளஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை–600 005 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர், பொ.ப.து.,/நீ.ஆ.து., இயக்கம் மற்றும் பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை–600 005 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,/நீ.ஆ.து., பணிமனை மற்றும் பண்டகசாலை வட்டம், சேப்பாக்கம், சென்னை–600 005 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேடு / உபரி–1

26/10/21

செயற்பொறியாளர் மற்றும்
பொது கண்காணிப்பாளர், பொ.ப.து.
நீ. ஆ.அ, பொ.ப.பணிமனை, சென்னை-1

26/10/2021